உ

(ஓம்-தத்-சத்.)

இரங்கோன்-சவுட்டான்-பக்கோ இன்னும்
பல இடங்களிலும் ஏற்பட்ட

பூமியதிர்ச்சியும்

பர்மா தெலுங்கரின்

படுகொலைச் சிந்தும்

அடங்கியது.

இஃது

சர்வமதச்சித்தாந்த மஸ்தான் க-பி நூர் மகம்மது பாவா அவர்
களின் பிரதம மாணவரான திருநெல்வேலி மாநகரம் மௌலா
தீன் முகம்மது என்ற தீ. மூ. தாஸரின் பிரதம சீடனும்
பூந்தட்டான் ஸ்ரீ சத்தி சிவானந்த ஒரிஜனல் பாய்ஸ்
கம்பெனி உபாத்தியாயனாகிய புதுவை
சஞ்சீவினாயன்பேட்டை
தி. மூ. சிவஞானம் பிள்ளை அவர்களால்
இயற்றப்பெற்று

இரங்கூன்
நவீனகதா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை] 1930 [அணா 1.

ஸ்ரீமான் ச. தா. மூர்த்தி முதலியார் அவர்கள் இயற்றிய நூல்கள்.

புஷ்பாவதி அல்லது சதியாலோசனை சூழ்ச்சி ...	0	8	0
கண்ணம்மாள் அல்லது கண்டதும் காதல் ...	0	8	0
தியாகராஜன் அல்லது நல்லொழுக்க சீலன் ...	0	8	0
மாணிக்கவல்லி அல்லது கள்ளர் கூட்டத்தைக் களைந்த கட்டழகி	0	8	0
நடராஜன் அல்லது நாடகஞ் சென்ற சம்பவம் ...	0	8	0
சிவகாமி அல்லது தப்பியோடிய பெண்... ...	0	8	0
திருவள்ளுவர் அவரது உபதேசங்கள்	0	8	0
நீல அறையின் அதிசயம் அல்லது காணாமற் போன மாணிக்கம்	0	8	0
என் தந்தையார்	0	6	0
கூடா ஒழுக்க சகோதரன்	0	6	0
அம்பிகாபதி கம்பர் குமாரன்	0	4	0
தபால் சரித்திரம்	0	9	0
இன்னுரைக் களஞ்சியம் அல்லது நல்லுரைத் திரட்டு...	1	0	0
விஷயரசமஞ்சரி ஓர் அனுபவ ஞான நூல் ...	1	4	0

சுகுணகலாவதியம் ஓர் அருமையான நவீனகம் ...	1	8	1
மதுராம்பாள் அல்லது சூதும் வாதும் வேதனை செய்யும்	0	8	0

நவீனகதா புத்தகசாலை, இரங்கூன்

உ

விநாயகர் துதி.

வெண்பா.

ஓம் நமசிவாயமைந்து ஓங்கிவளரும் கருணை
நாம் நமதாவான மறைநாயகனே ஆம்ஸகலை
போதமுறை காட்டியருள் பொங்கும் கரிமுகனை
நீதமுடனே பணிந்தேன் நித்தம்.

இராகம் நாதநாமக்கிரியை அடதாளம்

இது பரிதாபம் பூமி அதிர்ச்சியால்
யேர்ப்பட்ட சேதம் (இது)

நிகழும் பிரமோதூத வருஷம் சித்திரையாச்சு
நேரே சோமவாரம் இருபத்தி மூன்றாச்சு
இரவு மணியெட்டே காலுக்கதிகமாச்சு
ரவிபோலே பூக்கம்பம் யெறிந்து விழுகலாச்சு
பூமியாடிற்று பூவுலகெங்கினும்
புழுதியாயிற்று (1)

மாடிவீடுகளெல்லாம் ஆடி விழுகலாச்சு
மனைவி பிள்ளைகளுடன் சொத்தை மரக்கலாச்சு
மாதா பிதாவுங்கூட தேடி யழுகலாச்சு
மாமி மாமனுங்கூட மடிந்துயிர் விடலாச்சு
மைந்தரே வாரும் கந்தனை யனுதினம்
மனதிலே கூரும் (2)

சவுட்டான் தோங்குவாகையான் ஜலமே பெருகி போச்சு
சாக்ஷி சொல்லுவோமென்றால் ஜனம் வரதடையாச்சு
செத்து மடிந்தவர்கள் கத்தி திரியலாச்சு
சித்தம் நொந்து ஜனங்கள் சேதமதிகமாச்சு
பரிதாபமாச்சே பாரதமாதாவே
பாக்யமும் போச்சே (3)

ரங்கோன் நகர்க்கடுத்த பக்கோ நகர் பாழாச்சு
ரங்கநாதர் கோவில் சிகர முறியலாச்சு
பக்கோ நகரில் பூமி வெடித்து ஜலமுண்டாச்சு
படக்காகூடிக்குள் ளிருந்தோர் பரிதாபமுயிர்போச்சு

ரயில்விழலாச்சு பர்மா புகைரத
மெயில் சேதமாச்சு (4)

பிரேசர் வீதி மூகல் ரோட்டு மூனை வீடாச்சு
பெரிய மெத்தை யிடிந்து சரிந்து விழுகலாச்சு
மூகல்வீதி பள்ளியில் மூனையும் ஒடியலாச்சு
முப்பத்தைந்தில் பள்ளி கோரிவிழுந்து போச்சு

மூனைவீடு போச்சு இரண்டடுக்கு மெத்தை
முறிந்திடலாச்சு (5)

சீனர்கள் வாழும் வீதி சேதமதிகமாச்சு
சனத்தோடு ஐந்தடுக்கு வீடுயிடியலாச்சு
செகிரிடரி கட்டடம் சேதமதிகமாச்சு
சீனன் அடவுக்கடை மேல்வீடிடியலாச்சு

இன்னம் கேட்பீரே இக்கலியுகத்திலே
இதுவென்ன சீரே (6)

பூந்தட்டாணில் வீடு பொடி பொடியாச்சுது
பொதுமெம்பர் அருபத்தி மூன்றுங்கல்லியாச்சு
புதுமெத்தை வீடொன்று இடிந்து விழுகலாச்சு
மொத்தம் செத்தவர் லக்கம் பத்துக்கு மேலாச்ச

இன்னம் சொல்வேனே யீடன் வீதியில் வீடு
இடிந்ததை நானே (7)

கள்கஞ்சா குடியாச்சு கடவுள் தியானம் போச்சு
களவுசூது கொலை கணக்கில்லாமிதமாச்சு
இந்து மதமும் கெட்டு இறைவன் துதியும் போச்சு
இஸ்லாத்தில் கூட ஓதல் தொழுதல் மரக்கலாச்சு

இதனாலே கஷ்டம் ஏற்படுத்தினனல்லா
இதற்கென்றே நஷ்டம (8)

புருஷன் சொல்லை மனைவி மீரி நடக்கலாச்சு
போதாதென்று பெண்கள் கள்ளை குடிக்கலாச்சு

கொண்டவனைக் கண்டதும் கோபமிகவுண்டாச்சு
கண்டவனை நேசித்து கடவுள் வணக்கம் போச்சு
அந்நிய-புருஷன் அவர்களுக்கு நேசன்
அகப்பட்ட. ஆசான் (9)

ஜாதி விடுத்து பெண்கள் ஜாதிபடுக்கலாச்சு
ஜோதி யறிய தாலி கட்டினதும் பொய்யாச்சு
அனுதினம் ஆண்டவனை துதிசெய்து போற்றுங்கள்
அகத்திலிருக்குங்கெட்ட குணத்தை விட்டோட்டுங்கள்
அறஞ்செய்து போற்று அன்றுடம் தவறாது
அய்யமிட்டேத்து (10)

நூர்முகம்மது பாவா சீடன் தீ. மு. தாஸன்
பேர்விளங்கிடத் தமி ழிசையுஞ் சொல் சிவஞானம்
பாரிலுள்ளோர் யிதை படித்திடவே நானும்
பலருமறிய பாடி யச்சடித் தேற்றினேன்
பக்திமான் நீரே யிதைபடித்திட நீரும்
பாக்யம் பெற்றீரே (1 1)

(சத்திய மேனுந்தளரா நாடு எ. வ. மெட்டு)

ஆதி சிவன் கைலைப்போல் கண்டு அது
ஆகினதே யிரண்டு துண்டு

ஜோதிமயமான தோர்பூக்கம்பம் விழ
ஜாதிபலர் மாண்டா ருலகெங்கும்

ரயில்தொடர் வண்டி பலசேதம் பர்மா
மெயில் வரவில்லையே சந்தேகம்

படக்காக்ஷிக்குள்ளே பலர் மாண்டார் ஐயோ
படுத்துரங்குவது போல் நீண்டார்

பிரமோதூத வருஷம் சித்திரை மாதம் தேதி
இருபத்தி மூன்று சோமவாரம்

இரவு மணி யெட்டேகாலாச்சு பூமி
பாரங் குறைத்தாளே பூமாதேவி

சவுட்டான் தோங்குவா கையான் வெள்ளம் அது
சகிக்கமுடியா ஜல பள்ளம்

பக்கோவில் பூமி வெடித்ததாலே கெங்கை
பாய்ந்தாளே ஊருக்குள்ளாலே

அக்கினியால் சிலர் உயிர் துறந்தார் சொந்த
மக்கள் மனைவி சொத்தையு மறந்தார்

இக்கவி செப்பிய சிவஞானம் தமிழ்
இசைந்தாருலக உபகாரம்

பர்மா தெலுங்கரின் படுகொலை

(நொண்டிச் சிந்து.)

பர்மாவின் பரிதாபம் நடந்த
பாரதயுத்தம்போல் சண்டை பார்த்ததேயில்லை

தெலுங்கரில் சேதமதிகம் கலகம்
தெருக்களிலுள்ளவரை வெட்டியெரிந்து

பர்மிய கூலி கொடுமை செய்த
பரிதாபமன்றி கொலை செய்யத் துணிந்தார்

கூலி குறைவானதினாலே தெலுங்கர்கள்
கூடிபேசி வேலைக்கவர் போகவுமில்லை

பி. ஐ. எஸ். என். கம்பெனியார்கள் பர்மாக்கூலி
பிரியமுடன் வேலைக்கு அழைத்துக் கொண்டார்

கம்பெனியில் நஷ்டமதிகம் கண்டவுடன்
கடுகினில் தெலுங்கரை காம் கரோ வென்றார்

கூலிகள் வசிக்குமிடத்தில் பர்மியக்கூலி
கூட்டங்கூடி பேசி கொலை செய்யத் துணிந்தார்

நரவாகனங்களும் சேதம் ரங்கோனில்
நாய் நரிகள் தின்பதற்கேற்ற பிரேதம்

ஈட்டி கம்பி கத்தி டாவுடன் பொங்கியுங்கூட
மோட்டார் வண்டியேறிக்கொண்டு கொல்லத்துணிந்தார்

பொங்கிவேடம் பூண்ட பர்மியர் போனவழி
பொதுமக்கள் பார்த்தவுடன் வெட்டத் துணிந்தார்

இந்து முஸ்லீம் ஒற்றுமை சேர்ந்து பர்மியரை
இஸ்லாத்தின் வேதஞ்சொல்லி அறுத்து வந்தார்

ஏகஜன கூட்டத்தை கண்டார் பர்மியர்கள்
வேகமாக கூட்டத்துடன் ஓட்டம் பிடித்தார்

கர்னல் துரை கண்டுகொண்டார் கலகமதை
கண்டிப்பாய் நிறுத்தமன துணிவு கொண்டார்

கொர்க்கா சிப்பாய் பஞ்சாபிகளும் கேம்ரன்கூட
கூட்டத்தை கலைக்க குண்டு வெடி தீர்த்தார்

கூட்டக்கொள்ளை யடித்துவந்தார் பர்மியக் கூலி
குண்டுசத்தம் கேட்டவுடன் மாண்டு மடிந்தார்

கலகத்தையடக்கி விட்டார் கவர்ன்மெண்டில்
கலங்கவேண்டா மெனவே தேருதல் செய்தார்

ஆயிரத்தி தொளாயிரத்தி முப்பதாமாண்டில்
அடுத்தமேமாதம்திகதி இருபத்தாரில்

சோமவாரம் காலை ஐந்தரை மணிக்கு யுத்தம்
சேர்த்தடித்தார் பர்மியர்கள் தெலுங்கரையே

நெல்லை தீ. மு. தாஸரின் சீடன் சிவஞானம்
நேர்த்தியுடன் பர்மா கொலை பார்த் தெழுதினேன்.

(கும்மி.)

பாரத யுத்தத்தை பார்த்ததில்லை நாமும்
பர்மா படுகொலை பார்த்து விட்டோம்
பர்மா தெலுங்கரின் சண்டைபோலே யினி
பார்ப்பதரிதாகும் நேசர்களே (1)

கூலி குறைவானதாலே தெலுங்கரும்
கூட்டத்தில் வேலைக்கு மாட்டோமென்றார்
காலரடி பர்மிய கூலிகளும் வேலை
கண்டிப்பாய் செய்ய துணிவு கொண்டார் (2)

பர்மியர் ஓட்டம் பிடித்து விட்டார் பின்னால்
பட்டாளம் வந்ததை பார்த்துக்கொண்டார்
பய்யா பய்யா வென்று பதுங்கலுற்றார் கூட
பாதுகாரெங்களை யென்று சொன்னார் (3)

லான்மடோ அல்லத்தின் சேதமென்ன சொல்வேன்
லலாட விதிப்போல் முடித்துவிட்டார்
பாலா கத்தி கம்பி தாங்கியே பர்மியர்
நாலாபக்கத்திலும் வெட்டி தீர்த்தார் (4)

ரங்கோன் பிரபுக்கள் ஒன்று சேர்ந்தார் அவ
ரெங்கும் தெலுங்கரை கார்த்து வைத்தார்
அன்னமளித்தார்கள் வீடு தந்தார் சிலர்
அரிசியுடன் காசு தானம் செய்தார் (5)

காலையில் காப்பியும் ரொட்டி சுண்டல் தந்தார்
கால் கை முகத்துக்கு தண்ணீர் தந்தார்
வேளை தவராமல் தர்மம் நடக்குது
வேதன் விளையாட்டும் செய்துவிட்டான் (6)

சர்வமதச் சித்தாந்த மஸ்தானே யெங்கள்
சற்குரு சதவதனம் பாவா அவர்
பிரதம சீடனும் நெல்லை தீ. மு. தாஸன்
பேதமெண்ணு சிவ ஞானந்தமிழ் (7)

தெம்மாங்கு

பாரத மாதாவேணி பாலர்களை யேன் மடித்தாய்
பரிதாபமில்லாமலே பார்த்திருந்தாய் நீயொருத்தி

பர்மா கொலை சிந்து வாங்கி
பாருங்கள் ஓரணு தந்து

சாண் வயர் பிழைக்க வந்த சாதுவான தெலுங்கரையே
சண்டாளப் பர்மியர்கள் சாடினார் கத்தியாலே பர்மா
கூட்டங்கண்ட தெலுங்கர்களும் கூடிவிட்டார் தடியெடுத்து
கட்டைகம்பு இரும்பு செங்கல் யெடுத்தெரிந்தார் பர்மியர்மேல் பர்
துரைத்தனத்தார் கண்டவுடன் துடுக்கடக்கி நிருத்திவிட்டார்
துலைதூரம் பர்மியரும் குடியேரி போனதென்ன பர்மா
இனியிருந்தால் மோசமென ஏகுரார் தெலுங்கர்களும்
இந்திய நாட்டைத்தேடி ஏகினரே பந்துவுடன் பர்மா
சனிடையான மருவாரத்தில் ரெண்டுகப்பல் நிறைய தெலுங்கர்
பெண்டுபிள்ளை கூட்டிக்கொண்டு போகிறரே காக்கினடா பர்மா
முதல்பாகம் முடித்துவிட்டேன் முகல்வீதி கூட்டங்கண்டேன்
இதுபோலிரண்டாம் பாகம் இனிவருமே படிப்பதர்க்கு பர்மா

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட ஸ்ரீ முருகானந்த கீதா
மிர்தம் கூடிய சீக்கிரம் வெளிவரும். எதிர்பாருங்கள்.